**செய்தி வெளியீடு எண் : 1412** **நாள்:24.12.2021**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் தமிழகமெங்கும் 1.80 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இக்குடியிருப்புகளையும், இதர சமுதாய உள்கட்டமைப்பு பணிகளையும் பராமரிப்பது இன்றியமையாததாகும். இதுவரை வாரியமே இப்பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வந்துள்ளது. வாரியத்தோடு குடியிருப்பு பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் குடியிருப்போர் நலச்சங்கங்களும் இப்பராமரிப்பு பணியில் ஒருங்கிணைந்து செயல்பட்டால் பராமரிப்பு பணிகளை சிறப்பாக செயல்படுத்த முடியும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 15.7.2021 அன்று நடைபெற்ற வாரிய பணிகள் குறித்த ஆய்வு கூட்டத்தில் **"நம் குடியிருப்பு நம் பொறுப்பு"** (**Our Tenements, Our Responsibility**) என்ற புதிய திட்டத்தை அறிவித்தார்கள். அதன்படி, அரசாணை எண். G.O. (4D) No.55, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் கீழ் 17.12.2021 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் புதிய குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்படும். மேலும், ஏற்கனவே இருக்கும் குடியிருப்போர் நலச் சங்கங்கள் சரியாக செயல்பட வழிவகை செய்யப்படும். இப்புதிய திட்டத்தின் நோக்கங்கள் பின்வருவன:

1. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குடியிருப்புகளை நன்கு பராமரித்தல்.
2. பழுது மற்றும் புதுப்பித்தல் பணிகளை சரியான நேரத்தில் மேற்கொள்ளுதல்
3. புதுப்பித்தல் பணிகளை முறையாக செயல்படுத்துதல்
4. குடியிருப்போரின் விண்ணப்பத்திற்கேற்ப கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
5. திறம்பட செயல்படும் குடியிருப்போர் நலச்சங்கங்களை உருவாக்குதல்.
6. பராமரிப்பு பணிகளை முறையே குடியிருப்போர் நலச்சங்கங்களிடம் ஒப்படைத்தல்,
7. பொருளாதர நிலையில் குடியிருப்போர் நலச்சங்கங்களை மேம்படுத்துதல்.
8. வாரியம் மற்றும் குடியிருப்போர் நலச்சங்கங்களிடம் சரியான ஒருங்கிணைப்பை உருவாக்குதல் மற்றும் தீர்ப்பு நெறிமுறைகளை உருவாக்குதல்.

"குடியிருப்போர் நலச்சங்கங்களின் பங்களிப்புடன் "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" என்ற திட்டத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்.

"நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" என்ற திட்டத்தின் மூலம் குடியிருப்போர் நலச் சங்கங்களை ஈடுபடுத்தி குடியிருப்புகள் பராமரிக்கப்படும். குடியிருப்புகளின் பராமரிப்பு செலவினங்களுக்கான மொத்த செலவில் 50 விழுக்காடு அரசாலும் மீதமுள்ள 50 விழுக்காடு குடியிருப்போர் நலச்சங்கங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படும்". தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. 2021–2022 ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.20 கோடியும், 2022– 2023 நிதி ஆம் ஆண்டிற்கு ரூ.40 கோடியும், 2023 – 2024 நிதி ஆம் ஆண்டிற்கு ரூ. 40 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

வாரியம் சென்னை மற்றும் இதர நகர்ப்புறங்களில் 1.80 லட்சம் குடியிருப்புகளை கட்டியுள்ளது. மின்தூக்கி உள்ள குடியிருப்புகளுக்கு மாத பராமரிப்பு ரூ.750/– ஆகவும், மின்தூக்கி இல்லாத குடியிருப்புகளுக்கு ரூ.250/– வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு கட்டணம் சரியாக செலுத்தப்படாததால் பராமரிப்பு பணிகளை வாரியம் மேற்கொள்வது சிரமமாக திகழ்கின்றது. எனவே, இப்பொருப்பு வாரியத்தின் துணையோடு குடியிருப்போர் நலச்சங்கங்கள் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

இக்குடியிருப்போர் நலச்சங்கங்களினால் வசூல் செய்யப்பட்டுள்ள பராமரிப்பு தொகைக்கு ஈடான மானியம் அரசால் வாரியத்திற்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குடியிருப்போர் நலச்சங்கங்களின் பங்களிப்பு வங்கி கணக்கில் செலுத்தப்பட்ட பின் வழங்கப்படும்.

தினசரி பராமரிப்பு மற்றும் சிறிய பழுது பார்த்தல் முதலிய நம் குடியிருப்பு, நம் பொறுப்பு நிதியிலிருந்து செயல்படுத்தப்படும்.

குடிநீர், மின்சாரம், மின்தூக்கி பொதுவான இடங்கள் பராமரித்தல் மற்றும் முக்கியமான பழுது பார்த்தல் ஆகியவை வாரியத்தால் செயல்படுத்தப்படும். கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் வாரியத்தின் பங்கு 50% விழுக்காடும் குடியிருப்போர் நலச்சங்கங்களின் பங்களிப்பு 50% விழுக்காடும் உடன் செயல்படுத்தப்படும்.

வாரியத்துடன் குடியிருப்போர் நலச்சங்கங்களின் ஒத்துழைப்பு, பங்களிப்பு மற்றும் சமுதாய பொறுப்புடன் இணைந்து நம் குடியிருப்பு, நம் பொறுப்பு திட்டம் சிறப்பாக செயல்பட்டு, பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**